International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 3, Issue 3, July – September 2016 ISSN 2394-6393 (Online)

# தற்கால இலக்கணக் கட்டமைப்பில் தினமலர்

முனைவர் கி. சங்கர நாராயணன்

*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை*
*சென்னைப் பல்கலைக்கழகம்*
*மெரினா வளாகம், சென்னை - 600005*

தமிழின் முன்னணி நாளிதழான தினமலரானது, தற்கால இலக்கணக் கட்டமைப்பிற்கு துணைபுரியும் பாங்கினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. 2011 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர், 2012 ஆம் ஆண்டு சனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய ஐந்து மாத இதழ்களில் காணப்படும் பெயர்கள் மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## பெயர்கள்

தொல்காப்பியம் திணை அடிப்படையில் பெயர்களை மூன்றாகப் பிரிக்கின்றது. அவையாவன் 1. உயர்திணைப் பெயர் 2. அஃறிணைப் பெயர் 3. ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமைய (விரவுப் பெயர்). பெயரினை ஆறுவகையாகப் பாகுபாடு செய்கிறார் முனைவர் பொற்கோ (இக்காலத் தமிழ் இலக்கணம்,2006:38-40). அவையாவன்

1. ஆண்பாற்பெயர்
2. பெண்பாற்பெயர்
3. உயர்பாற்பெயர்
4. பலர்பாற்பெயர்
5. ஒன்றன்பாற்பெயர்
6. பலவினபாற்பெயர்

அஃறிணைப் பெயர்ச் சொற்கள் எல்லாம் பன்மை உணர்த்தும் கள் விகுதி இல்லாமல் வழங்குகின்றன. கள் விகுதி சேர்த்துக்கொள்ளும் இடமும் உண்டு என்று தொல்காப்பியர் விதித்தால் பண்டைய முறை இன்னதெனத் தெளிவாகின்றது. இன்னும் நாட்டுப்புற மக்கள் கள் விகுதி இல்லாமலே அஃறிணைச் சொற்களை வழங்குவதாலும் இவ்வுண்மை புலனாகும். செய்யுட்களில் புலவர்களும் கள் விகுதியைப் புறக்கணித்தே வந்துள்ளனர்.

*ஓர் எருது (ஒருமை)*
*பத்து எருது (பன்மை)*

கள் விகுதிகள் முதலில் அஃறிணையில் இடம்பெற்று, நாளடைவில் உயர்திணையில் இடம்பெற்று நிற்கின்றன. இலக்கணநூற்கள் குறிப்பிடும் பெயர்ச்சொற் பாகுபாடு குறித்த செய்திகள் பெரும்பான்மையும் தொல்காப்பியம், நன்னூல் கருத்துக்களை அடியொற்றியும் சில மாற்றங்களைப் பெற்றும் அமைகின்றன.

தொழிலால் வரும் பெயர்கள்
நடிகன் (தினமலர்,ப.1,14.12.2011)
அர் விகுதிப் பெற்ற பிறமொழிச் சொற்கள்
டிரைவர் (தினமலர்,ப.6,13.12.2011)
கண்டக்டர் (தினமலர்,ப.6.13.12.2011)
அர்கள் விகுதிப் பெற்ற பிறமொழிச்சொற்கள் டிரைவர்கள் (தினமலர்,ப.1,23.12.2011)
பலவின்பாற் பெயர்கள்
(அரசியல்)கட்சிகள் (தினமலர்,ப.1,23.12.2011)
காட்சிகள் (தினமலர்,ப.1,23.12.2011)
பிறமொழிச்சொல் ு கள் விகுதி
ஓட்டல்கள் (தினமலர்,ப.1,23.12.2011)
டூவீலர்கள் (தினமலர்,ப.1,23.12.2011)
தியேட்டர்கள்(தினமலர்,ப.1,23.12.2011)

## தொகுதிப் பெயர்கள்

ஒன்றியம் (தினமலர்,ப.12,19.12.2011)
காலப் பெயர்கள்
திருவாதிரை (தினமலர்,ப.12,10.12.2011)
ஆங்கிலப் பெயர்கள்
நவம்பர் (தினமலர்,ப.1,12.11.2011)

## சாதிப் பெயர்கள்

வரதராஜ் நாயுடு (தினமலர்,ப.8,20.11.2011)
சங்கரய்யாக்கம்பர் (தினமலர்,ப.13,13.12.2011)
ராமசாமித்தேவர் (தினமலர்,ப.20,04.12.2011)

## ஆகுபெயர்கள்

தொல்காப்பியம் (தொல்.114-117), ஆகுபெயர் என்பதற்கான இலக்கணத்தைச் சுட்டாமல், அதன் வகைகளைச் சுட்டுகிறது. மேலும், ஆகுபெயர் தற்கிழமையாகவும் பிறிதின் கிழமையாகவும் வரப்பெறும் என்கிறது. 1. முதலாகுபெயர் 2. சினையாகுபெயர் 3. இடவாகுபெயர் 4. பண்பாகுபெயர் 5. காரணவாகுபெயர் 6. இருபெயரொட்டாகு பெயர் 7. கருத்தாவாகு பெயர் என்ற ஏழினைச் சுட்டுகிறார்.

- "முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்
  சினையிற் கூறும் முதலறி கிளவியும்
  பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
  இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
  வினைமுல லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
  அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி" (தொல்.சொல்.114)
- பாலாற்றில் புதிய அணை கட்ட ஆந்திரா முடிவு (தினமலர்,ப.1,9.12.2011)
- புதிய அணை கட்டுவதில் கேரளா பிடிவாதம் (தினமலர்,ப.4,8.12.2011)

## ஆக்கப் பெயர்கள்

பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப் பெயர்கள் எனப்படும். இவ்வாறு பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை ஆக்கப்பெயர் விகுதிகள் என்பர்.

தாரர் விகுதிப் பெயர்கள்
ஜாமீன்தாரர் (தினமலர்,ப.12,17.12.2011)
ஆளி விகுதிப் பெயர்கள்
உளவாளி (தினமலர்,ப.6,1.11.2011)
எதிராளி (தினமலர்,ப.15,18.12.2011)
ஆளர் விகுதிப் பெயர்கள்
நெசவாளர் (தினமலர்,ப.12,19.12.2011)
மானம் விகுதிப் பெயர்கள்
பகிர்மானம் (தினமலர்,ப.12,13.11.2011)
இயல் விகுதிப் பெயர்கள்

அறிவியல் (தினமலர்,ப.5.03.12.2011)
கரம் விகுதிப் பெயர்கள்
துணிகரம் (தினமலர்,ப.2,24.12.2011)
காரம் விகுதிப் பெயர்கள்
பலாத்காரம் (தினமலர்,ப.8,9.12.2011)
துறை விகுதிப் பெயர்கள்
விவசாயத்துறை (தினமலர்,ப.4,23.12.2011)
இ விகுதிப் பெயர்கள்
பட்டதாரி (தினமலர்,ப.6,24.11.2011)
நீதிபதி (தினமலர்,ப.3,21.11.2011)

## தொழிற் பெயர்கள்

வினை அடியாகப் பிறந்து வினை நிகழ்வினை அல்லது நிகழாமையை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.
தி விகுதிச் சொற்கள்
அவதி (தினமலர்,ப.10,22.11.2011)
உறுதி (தினமலர்,ப.2,19.11.2011)
டு விகுதிச் சொற்கள்
ரெய்டு (தினமலர்,ப.1.19.11.2011)
வு விகுதிச் சொற்கள்
முடிவு (தினமலர்,ப.2,21.11.2011)
ஆய்வு (தினமலர்,ப.10,19.11.2011)
உயர்வு (தினமலர்,ப.1,22.11.2011)
து விகுதிச் சொற்கள்
ரத்து (தினமலர்,ப1,08.12.2011)
கு விகுதிச் சொற்கள்
வழக்கு (தினமலர்,ப.5,19.11.2011)
ளை விகுதிச் சொற்கள்
ரகளை (தினமலர்,ப.1.09.12.2011)
ப்பு விகுதிச் சொற்கள்
பாதிப்பு (தினமலர்,ப.11,22.11.2011)
வாய்ப்பு (தினமலர்,ப.10.21.11.2011)
இணைப்பு (தினமலர்,ப.10.13.12.2011)
துண்டிப்பு (தினமலர்,ப.10.13.12.2011)
பு விகுதிச் சொற்கள்
பங்கேற்பு (தினமலர்,ப.7,22.11.2011)

## கூட்டுப் பெயர்கள்

இரண்டு அல்லது பல சொற்களை இணைத்து உருவாக்கப்படும் பெயர்ச்சொற்கள் கூட்டுப் பெயர் எனப்படும்.
மூடுபனி (தினமலர்,ப.6,23.12.2011)
தமிழ் + ஆங்கிலக் கூட்டுப்பெயர்கள்
மயக்க பிரட் (தினமலர்,ப.12,25.11.2011)
படகு சர்வீஸ் (தினமலர்,ப.11,16.12.2011)
ஆங்கிலம் + தமிழ்க் கூட்டுப்பெயர்கள்
ஆட்டோ..ஓட்டுநர் (தினமலர்,ப.14,23.12.2011)
ரயில் நிலையம் (தினமலர்,ப.12,27.12.2011)

## அடைப் பெயர்கள்

இடத்தினால் அடைப்பெயர்கள்
மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் (தினமலர்,ப.12,21.11.2011)
காடுவெட்டி குரு (தினமலர்,ப.4,20.11.2011)
முல்லை பெரியாறு அணை (தினமலர்,ப.15,20.11.2011)
பிறமொழி அடைச்சொற்கள் + பெயர்
செஸ் ஆனந்த (தினமலர்,ப.14,21.11.2011)

தொல்காப்பியம் முதலாகத் தமிழ்க்காப்பு இயம் வரையிலான இலக்கணநூற்கள் எல்லாம் பெயர்களின் வகைகளை வரையறுத்து இலக்கணக் கோட்பாடுகள் இவைதான் என்று கட்டமைத்துள்ளன. ஆனால் தற்காலத் தமிழில் குறிப்பாகத் தினமலர் நாளிதழில் இலக்கணிகள் குறிப்பிட்ட இலக்கணக் கோட்பாடுகள் காணப்பட்டாலும் பிறமொழித் தாக்கம், பிறமொழிச் சொற்களை அப்படியே ஒலிபெயர்த்து எழுதும் முயற்சியால் இலக்கணிகள் குறிப்பிட்ட இலக்கணக் கோட்பாடுகளை மீறி புதுவகையான இலக்கணக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. இதன் விளைவாகத்தான் கூட்டுப்பெயர்கள், ஆக்கப்பெயர்கள், புதுமையான தொழிற்பெயர்கள் என்ற புதிய இலக்கணக் கோட்பாட்டு உருவாக்கமும், மாற்றங்களும் இடம்பெறுகின்றன. மரபிலக்கணம் கூறிய இலக்கணக் கோட்பாடுகளைக் கொண்டு அதன்வழி நம் இலக்கண உலகை அமைப்பதோடு, காலமாற்றத்திற்கேற்பவும், வளர்ச்சிநிலைகளுக்கேற்பவும் உருவாகியுள்ள மாற்றங்களைச் சுட்டி இனம் காண்பதோடு, தற்காலத் தமிழிக்குத் தேவையான புதிய இலக்கணக் கோட்பாடுகளை உருவாக்கவேண்டியதன அவசியத்தையும எதிர்நோக்கி இரு க்கின்றோம். அவ்வகையில் தற்காலத் தமிழுக்கான புதிய வகை இலக்கணக் கோட்பாடுகளைக் கண்டறிந்து தமிழ் இலக்கணக் உலகிற்கு மிகப்பெரிய படைப்பினை உருவாக்குவதில் தமிழ் நாளிதழான தினமலர் முன்னிற்கின்றது.

## துணைநூல்கள்

[1] அழகேசன்,சு., (உ.ஆ.,) நன்னூல் சொல்லதிகாரம் ,சுதாபதிப்பகம், தூத்துக்குடிஇ 2003.
[2] அழகேசன், சு., (ப. ஆ.,) இதொல்காப்பியம், சுதாபதிப்பகம், தூத்துக்குடிஇ 2008
[3] ஆறுமுக நாவலஇ இலக்கணச் சுருக்கம், வித்யா நுபாலன அச்சகம், சென்னைஇஇ1939.
[4] ஆறுமுக நாவலர்இ நன்னூல் - காண்டிகையுரை, வித்யா நுபாலன அச்சகம், சென்னை1971.
[5] இளம்பூரணர் (உ.ஆ.,)தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை. 1963
[6] இளவரசு, சோம. (ப.ஆ.,)நன்னூல் - விருத்தியுரை, அண்ணாமலைப பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் 1990.
[7] காசுமான்,மி., தமிழ்த்தாய் சொல்லிலக்கணம், காசுமான் பதிப்பகம், நந்தன் காடு, மார்த்தாண்டம். 1998
[8] காசுமான்,மி., தமிழ்க் காப்பு இயம்,காசுமான் பதிப்பகம், நந்தன் காடு, மார்த்தாண்டம். 2005
[9] குணவீர பண்டிதர் நேமிநாதம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி. 1956
[10] கோபாலையர்,தி.வே.,இலக்கணக் கொத்து,(ப.ஆ.,சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். 1990
[11] கோவிந்தராச முதலியார்,நேமிநாதம், கழக வெளியீடு, சென்னை. கா.ரா.(கு.உ.,) 1973
[12] சங்கர நமச்சிவாயர், நன்னூல் - விருத்தியுரை,(உ.ஆ.,)உ.வே.சா.நூல் நிலையம், சென்னை. 1991
[13] சண்முகம்,செ.வை. சுவாமிநாதம்,(ப.ஆ. ரூ உ.ஆ.,)மொழியியல் துறை வெளியீடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 1975
[14] சரவணத்தமிழன்.த.,தமிழ்நூல்,தமிழன் பதிப்பபகம், இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர். 1996
[15] சுந்தர மூர்த்தி,கு (ப.ஆ.,)முத்துவீரியம்,சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி. 1972
[16] சுப்பிரமணியம்,ச.வே.,(ஆ)தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை. 1978
[17] சேனாவரையர் (உ.ஆ.,)தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை. 1997
[18] தண்டபாணிசுவாமிகள் ஏழாமிலக்கணம் பூவை.கலியாண சுந்தரமுதலியார் பதிப்பு, இந்து தியாஜிகல் யந்திர சாலை,தஞ்சாவூர். 1990
[19] தண்டபாணிசுவாமிகள் அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர். 1991
[20] தமிழண்ணல் தொல்காப்பியம் சொல்லதிகாரம்,மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2006
[21] தமிழன்,த.ச., தமிழ்நூல், தமிழன் பதிப்பகம், திருவாரூர். 1996